Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

33ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 33 | பாலம்: 10 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 15, 2023

# சார்ள்ஸ் III மன்னரின் முடிசூட்டு விழா

“நான் சேவையைப் பெற்றுக்கொள்ள வரவில்லை சேவை செய்யவே வந்துள்ளேன்” என்றார் முடிசூடிய பின்னர் மன்னர் சார்ள்ஸ் III. வேல்ஸ் இளவரசர் (Prince of Wales) என அழைக்கப்பட்ட சார்ள்ஸ் பிலிப் ஆதர் ஜோர்ஜ் (Charles Philip Arthur George) ஐக்கிய இராச்சியம் மற்றும் 14 பொதுநலவாய நாடுகளின் மன்னராக 2023 மே 6ஆம் திகதி லண்டன் மாநகரில் உள்ள வெஸ்ற்மின்ஸ்ரர் அபேயில் (Westminster Abbey) முடிசூடிக் கொண்டார். முடிசூட்டு விழா நடைபெற்ற மண்டபமான வெஸ்ற்மின்ஸ்ரர் அபேயில் அரச பரம்பரையினர், பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள், அமெரிக்காவின் முதல் பெண்மணியான Jill Biden மற்றும் 90 நாடுகளின் தலைவர்கள் என 2,300 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

சார்ள்ஸ் III மன்னரின் முடிசூட்டு விழா பாரம்பரிய முறைப்படியும் அதீத மதசார்பு நிகழ்வாகவும் நடைபெற்றது. ஐக்கிய இராச்சியம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் மன்னரின் முடிசூட்டு விழா 1066ஆம் ஆண்டில் இருந்து வெஸ்ற் மின்ஸ்ரர் அபேயில் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

மன்னரின் முடிசூட்டு வைபவத்தின்போது அவருக்கு (St. Edward's Crown) ஒரு கிரீடமும், பின்னர் ஊர்வலத்தின்போது (Imperial State Crown) இன்னொரு கிரீடமும் அணியப்படுவது வழக்கம். St. Edward's கிரீடம் 1661இல் சார்ள்ஸ் II மன்னர் முடிசூடியது. இதில் நான்கு சிலுவைகள் மற்றும் கிறிஸ்தவ மதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அடையாளங்களும் உள்ளன. அத்துடன் கிரீடம் தங்கத்தினால் சுற்றிவர அலங்கரிக்கப்பட்டு அதில் மாணிக்கங்கள் பதிக்கப்பட்டுள்ளன. கிரீடம் ஊதா நிற வெல்வெட் துணியால் சுற்றப்பட்டு அதன் உள்பக்கத்தில் காட்டுக்கீரியின் (Ermine) உரோமம் பதிக்கப்பட்டுள்ளது. Imperial State கிரீடம் 1937இல் 2,868 வைரங்கள் பதித்துச் செய்யப்பட்டது. இதுவே மன்னர் நாடாளுமன்ற வைபவங்களுக்குச் செல்லும்போது அணிவது.

இரண்டு மணிநேரமாக நடைபெற்ற முடிசூட்டு விழாவின் சிறப்பு அம்சமாக வெஸ்ற்மின்ஸ்ரர் மதகுரு (Dean of Westminster) David Hoyle, St. Edward கிரீடத்தை எடுத்து கன்ரர்பரி பேராயர் (Archbishop of Canterbury) Justin Welbyஇற்கு வழங்க அவர் சிம்மாசனத்தில் இருந்த சார்ள்ஸ் III மன்னருக்கு ஆசி வழங்கிப் பின்னர் அந்தக் கிரீடத்தை மன்னரின் தலையில்



அணிவித்தார். அதைத் தொடர்ந்து அவையோர் “God Save the King” கீதத்தை இசைத்தனர். இராணி கமீலாவிற்கு Queen Mary's கிரீடம் அணிவிக்கப் பட்டது. இந்தக் கிரீடம் 1911இல் Queen Marryஇற்கு அணிவிப்பதற்கு உருவாக்கப்பட்டது.

அரசருக்கு முடிசூட்டப்பட்ட பின்னர் அபேயின் (Abbey) மணிகள் இரண்டு நிமிடங்கள் ஒலிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து துப்பாக்கி சுடப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. மன்னரின் முடிசூட்டு விழாவை ஐக்கிய இராச்சியத்தில் மட்டும் 20.4 மில்லியன் மக்கள் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பாகப் பார்வையிட்டனர். இராணி எலிசபெத் IIஇன் மரண ஊர்வலத்தை 26.5 மில்லியன் மக்கள் பார்வையிட்டனர்.

முடிசூட்டு வைபவத்திற்கு முன்னர் மன்னர் புனித எண்ணெயினால் அபிஷேகம் (Anointing) செய்யப்படுவார். இது ஒரு மிகவும் புனிதமான செயலாகக் கருதப்படுவதால் மன்னரிற்கு இந்நிகழ்வு நடைபெறும்போது பொதுமக்கள் பார்ப்பதைத் தடைசெய்து காவலர் திரைச்சீலையால் மறைத்துப் பிடித்துக் கொண்டிருப்பர். இது முடிசூட்டு விழாவின் மிகவும் முக்கியமும் மற்றும் புனிதமானதாகவும் கருதப்படுகிறது. மன்னரிற்கு அபிஷேகம் செய்யப்பட்ட புனித எண்ணெய் இஸ்ரேலில், ஜெருசலமில் உள்ள புனித Sepulchre தேவாலயத்தில் உள்ள அருட்தந்தையார் மற்றும் அங்கிலிகன் பேராயர் ஆகியோரால் புனிதப்படுத்தப்பட்டு எடுத்து வரப்பட்டது.

மன்னருக்கு அபிஷேகம் செய்யப் பாவிக்கப்படும் எண்ணெய் வைத்திருக்கும் குடுவை (Ampulla) கழுகு வடிவில் தங்கத்தில் செய்யப்பட்டது. கழுகின் சொண்டில் உள்ள மூடி திறக்கப்பட்டு அதனுள் உள்ள எண்ணெய் ஊற்றப்படும். கழுகு அக்காலத்தில் அரசாட்சியைக் குறிக்கும் சின்னம் ஆகும். 14ஆம் நூற்றாண்டின் கதை ஒன்றின்படி கன்னி மேரி (Virgin Mary) சென். தோமஸ் பெக்கெற் (St. Thomas Becket) முன்னர் தோன்றி இங்கிலாந்தின் மன்னர்களுக்கு முடிசூட்டு விழாவின்போது அபிஷேகம் செய்வதற்காக ஒரு தங்கக் கழுகு மற்றும் எண்ணெய் குப்பியையும் கொடுத்தார். இக்கதையை அடிப்படையாக வைத்தே இந்த எண்ணெய் வைக்கும் குடுவை அமைக்கப்பட்டது.

இந்தக் குடுவையில் இருந்து எண்ணெயைய் ஒரு கரண்டியில் வார்த்து மன்னருக்கு அபிஷேகம் செய்யப்படும். இந்தக் கரண்டி 12ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டதாகும். இது தொடர்பாக அரச குடும்பம் விடுத்த அறிக்கையில், இவ்வாறு கன்ரர்பரி பேராயரால் மன்னருக்கு எண்ணெய் அபிஷேகம்

தொடர்ச்சி 07 பக்கம்

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannenhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அணுகுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079
info@rathigahomes.ca
www.rathigahomes.com
Re/Max Realtron Realty Inc.

Selling/Leasing/Listing
www.vanyhome.ca/
Life Insurance & Super VISA
www.vjsfinancial.com
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact : 647-290-1022 | 0605bala@gmail.com | visit : www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* We help to find your best future home!

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com





# For All Your Private Mortgage Needs

## 8T Capital

Mortgage Administration # 13073



**AYNGKARAN SIVA**
Business Development Manager
Mobile: (647) 670-0320
ayngkaran@8twelve.capital
Website: www.8Twelve.capital



**JUTHIS KUPER**
Broker Relations Associate
Mobile: (647) 670-2078
juthis@8twelve.capital
Website: www.8Twelve.capital

- NOT Income Driven
- NOT Credit Driven
- Equity Based Lender
- Common Sense Lending Approach
- Interest Only Payments
- Flexible Terms
- Commitment issued less than 24 Hours
- Fast Funding within 2 to 3 business days
- 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
- Construction & Contractor Programs
- Flexible & Creative
- No Hidden Fees or Bait and Switch

***Available 7 days a week***


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

# விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ள தையிட்டிப் போராட்டம்




யாழ்ப்பாணம் - தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு எதிராக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் ஊடகங்களில் அதிக இடத்தைப் பிடித்திருந்த போதிலும், அரசியல் விமர்சகர்கள், பொது நோக்கர்கள் மத்தியில் விமர்சனங்களையும் கேள்விகளையுமே எழுப்பியுள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னிணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் இந்தப் போராட்டத்தை வழிநடத்தியிருந்தார். முன்னணியின் கட்சி உறுப்பினர்களும் அப்பகுதி மக்களுமாக சிலரே இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. 14 குடும்பங்களுக்கு சொந்தமான சுமார் 100 பரப்பு காணியை விடுவிக்க கோரியும், சட்டவிரோதமாக கட்டப்பட்ட பௌத்தக் கட்டுமானத்தை அகற்றக் கோரியும், பௌத்த மயமாக்கல் திணிப்பை எதிர்த்தும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மூன்று நாட்களாக தொடர்ச்சியாக நடத்தப்பட்ட இந்தப் போராட்டம் நீதிமன்றத்தின் கட்டளைக்குப் பின்னர் முடிவிற்கு வந்தது. தையிட்டி விகாரை வழிபாட்டிற்கோ, விகாரையில் இடம்பெறும் உற்சவத்திற்கோ எந்தவித இடையூறும் ஏற்படுத்த கூடாது என மல்லாகம் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

விகாரையின் முகப்பிலோ, பாதையிலேயோ தடைகளை ஏற்படுத்தக் கூடாது. விகாரை வழிபாட்டிற்கு வரும் மக்களுக்கோ, விகாரையில் நடைபெறும் உற்சவங்களுக்கோ, இடையூறு ஏற்படுத்தக் கூடாது. அதேவேளை அப்பகுதியில் உள்ளவர்களின் உரித்து ஏதேனும் பாதிக்கப்பட்டிருப்பின், நீதிமன்றில் உரிய வழக்கொன்றை தாக்கல் செய்து, அதற்கான நிவாரணத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.



இதனையடுத்து போராட்டம் கைவிடப்படுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

மூன்று நாட்கள் நடத்தப்பட்ட இந்தப்போராட்டம் ஊடகங்களில் பரவலாக வெளியானதோடு பலரது கவனத்தையும் ஈர்த்தது என்பது உண்மைதான். தையிட்டி விகாரை தொடர்பில் அறிந்திராதவர்கள் இதனை முக்கியமானதொரு போராட்டமாகவே பார்த்தனர். ஆனால், தையிட்டி விகாரை எப்போது அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் கட்டுமானப்பணிகள் எந்தளவில் நடந்து முடிந்திருக்கின்றது என்பதையெல்லாம் அறிந்தவர்களுக்கு இந்தப் போராட்டம் விமர்சனத்திற்கு உட்பட்டதாகவே அமைந்துள்ளது.

தையிட்டி விகாரை ஒரே நாளில் கட்டப்பட்டதா என்ற கேள்வி தனக்கு எழுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது சமூக ஊடகத்தில் பதிவிட்டிருந்தமையும் ஒரு 'நக்கல்' தொனியிலானதே.

தையிட்டியில் கட்டப்பட்டுள்ள விகாரையைப் பாரக்கும்போது அந்த விகாரையை இராணுவம் ஒரே நாளில் கட்டி முடித்துவிட்டதா? அல்லது பல வருடங்களாக இந்தக் கட்டுமானப் பணிகளை இராணுவம் திரை போட்டு மூடி வைத்திருந்ததா என்ற சந்தேகம் தனக்கு எழுவதாக மனோ கணேசன் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டிருந்தார். இதுதான் தையிட்டி விகாரை தொடர்பில் அறிந்தவர்கள் அனைவரும் கேட்கும் கேள்விதான்.

இந்த தையிட்டி விகாரை கட்டுமானப் பணி கடந்த நான்கு வருடங்களாக நடைபெற்று வருகின்றது. அதாவது 2019ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றது. இப்போது அதன் கட்டுமானப் பணி முக்கால்வாசிக்கு மேல் வந்துவிட்டது. பொதுமக்களது காணியில் சட்ட விரோதமாகக் கட்டப்படும் இந்த விகாரை அமைப்பிற்கு எதிராக அதன் ஆரம்ப கட்டத்திலேயே இவ்வாறானதொரு போராட்டத்தை நடத்தியிருக்க வேண்டும். இப்போது நடத்தப்பட்ட போராட்டத்தினால் எதுவுமே நடைபெறப்போவில்லை. இது தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் தெரியாமலிருக்காது.

அவ்வப்போது தமிழ் பிரதேசங்களில் புத்தர் சிலை முளைக்கும் போது அதற்கெதிராக போராட்டங்கள் நடத்தப்பட்டு அந்தப் புத்தர் சிலை அகற்றப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளது. அவ்வாறானதொரு புத்தர் சிலை



விவகாரமாக இதனைப் பார்க்க முடியாது. பாரியளவில் கட்டப்பட்டுள்ள இந்த விகாரையை இடித்தழித்து அகற்ற இராணுவமோ, பௌத்த அமைப்புக்களோ இடம்கொடுக்காது. அரசாங்கமும் அதனை செய்யாது என்பது தான் உண்மை.

எனினும், மூன்று நாட்களாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பொலிஸாரின் கெடுபிடிகள் ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டு பலரது கவனத்தையும் ஈர்க்கத் தொடங்கிய நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அதற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டது. போராட்டம் நடத்திய செ. கஜேந்திரன் உள்ளிட்ட குழுவினரை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா ஆகியோர் நேரில் சந்தித்து கலந்துரையாடி தங்கள் ஆதரவினையும் தெரிவித்திருந்தனர். அதேநேரம் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் உழவு இயந்திரங்களில் முட்கம்பிகள், வீதித் தடை கம்பிகள் என்பவற்றை விகாரைக்கு அருகில் வீதிகளில் போட்டு, தடைகளை ஏற்படுத்தினர்.

பெருமளவான இராணுவம் துப்பாக்கிகளுடன் விகாரையை சூழவுள்ள பகுதிகளில் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு



பலப்படுத்தப்பட்டது. இவ்வாறானதொரு சூழலில், நீதிமன்ற கட்டளையும் பிறப்பிக்கப்பட்டதையடுத்தே போராட்டம் முடிவிற்கு வந்தது.

தையிட்டியில் இந்த விகாரைக்கான அடிக்கல் நாட்டும் போதே அப்பகுதி மக்களைத் திரட்டி பாரியதொரு போராட்டத்தை நடத்தியிருந்தால் சில வேளை இதன் கட்டுமானப் பணியை தடுத்திருக்கலாம். விகாரை கட்டி முடிக்கப்பட்ட நிலையில் இப்போது நடத்தப்பட்ட போராட்டம் ஓர்அரசியல் நோக்கமுடைய - ஓர் அரசியல் சாகசமாகவே அமைந்துள்ளதாக பொது நோக்கர்களால் விமர்சிக்கப்படுகின்றது.

## நடந்து வந்த காலடி

எனது எட்டு வயதளவில்
பிழைக்கும் முயற்சிகள் தொடங்கிவிட்டேன்

அதிகாலையில் தூக்கம் கலைத்து
வேலைக்குப் போகவேண்டும்
காலை எட்டு மணிக்கு எழுதுகோல் புத்தகம் சுமந்து
பாடசாலை செல்லவேண்டும்
பள்ளியால் வந்து சாப்பிட்டபின்
பின்னேரம் நான்கு மணிக்கு
மீண்டும் தொழிலில் வியர்வை சிந்தவேண்டும்

முப்பது வயதில் திருமணம் நெருங்கும்வரை
வண்டில் இழுக்கும் வலுவுடன்
மூளையில் சுறுசுறுப்பைக் காவிக்கொண்டு
ஆக்கப் பணிகளில் இயங்கினேன்

எழுச்சிபெற்றது இலங்கை உள்நாட்டுப் போர்
இதயத்தை நொருக்கியது புலப்பெயர்வு எண்ணம்
அலைந்தேன் உழன்றேன்
வேற்றுத்திணையில் வேர் பதித்தேன்

காற்றுப்போன இரு சக்கரமுள்ள
சைக்கிளில் பயணிப்பதுபோல்
இரண்டு வேலையில் இனிய வாழ் நாட்களை
சிறுகச் சிறுகப் பணத்துக்காக விற்றேன்

நைற்றானிக் கப்பல் மூழ்கியபோது
கையை உயர்த்திக் கதறிய உயிர்கள்போல்
தாயகத்தில்
விமானக்குண்டு ஆயுத மனிதர் தொல்லைகளால்
குரல்கொடுத்த உறவுகள் பலர்
புலம்பெயர்ந்து வாழ்க்கை அமைக்கப் பாலமானேன்



இரும்புக் கம்பிக்கூண்டில் அடைபட்டுக் கிடந்து
சிறகடிக்கும்
உயர்கல்விச் சிந்தனைப் பறவையானேன்

பாலைத் திணையில் வரிந்து கட்டிய
பந்தய ஓட்டக் குதிரையானேன்



முத்துராஜா

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# ஜனாதிபதி நினைக்கும் தீர்வினை தமிழ் மக்களிடம் திணிக்க முடியாது!

**- விகிர்தன் -**

இனப்பிரச்சினை தீர்வு குறித்து வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் பேச்சு வார்த்தை ஒன்று ஆரம்பமாகியுள்ளது. கடந்த 11ஆம் திகதியும் 12ஆம் திகதியும் இரண்டு நாட்கள் இந்தப் பேச்சுக்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இரண்டு நாட்களில் இந்தப் பேச்சுவார்த்தை முடிந்து விடுமா மேலும் தொடருமா என்பது குறித்து தெரியவில்லை. அது குறித்த தகவல்கள் எதுவும் இதுவரையில் வரவில்லை.

இந்த நிலையில் கடந்த 11ஆம் திகதி முதலாவது பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. நல்லிணக்கம் தொடர்பில் கலந்துரையாடப்படுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், காணிப்பிரச்சினை, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பன தொடர்பில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் நாளான 12ஆம் அதிகாரப் பகிர்வு குறித்து கலந்துரையாடப்படுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், சந்திப்பு நடைபெறவில்லை அச்சந்திப்பு பிற்போடப்பட்டது. இரண்டாவது சந்திப்பு 15ஆம் திகதியே நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது மேதின செய்தி உரையில் இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும் பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம் என்றும் குறிப்பிட்டிருந்தார். இதனையடுத்தே வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

முன்னதாக, தைப்பொங்கல் நாளில் இனப்பிரச்சினை தொடர்பாக தீர்மானங்களை இறுதி செய்து, பெப்ரவரி நான்காம் திகதி தீர்வு காண்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார். அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். இந்த நிலையில் மீண்டும் ஒரு வாக்குறுதியை ஜனாதிபதி ரணில் வெளியிட்டுள்ளார். அதாவது "இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினை தீர்வு" என்பதே அந்த வாக்குறுதி.

தமிழ் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஆக்கபூர்வமாக அரசாங்கத்தோடு பேசி முடிவெடுக்கத் தயார் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னரே தெரிவித்திருந்தார்.

வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் வரலாற்று ரீதியான வாழ்விடங்கள் என்ற அடிப்படையில் இந்திய- இலங்கை ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரே அலகாக உருவாக்கப்பட்டது. அந்த அடிப்படைக்கு



மாறாக எந்த பேச்சு வார்த்தையிலும் ஈடுபட தாம் தயாராக இல்லை என்றும் இரா. சம்பந்தன் குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை, இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் சர்வதேசத்தின் பங்குபற்றல் - கண்காணிப்பு அவசியம் என்பதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் ஏனைய தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளினதும் கோரிக்கையாக உள்ளது. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியாரின் தலையீடு இன்றி உள்நாட்டு பொறிமுறையின் மூலமாகவே தீர்வினை உருவாக்கலாம் என்கின்ற தீர்மானத்திலேயே இருக்கின்றார். அதனை வெளிப்படையாகத் தெரிவித்துமிருக்கின்றார். இதுவே, நடைபெறும் பேச்சுவார்தைகளில் சிக்கலை ஏற்படுத்தும்.

"உள்ளகப் பொறிமுறையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. ஆகவேதான் சர்வதேச பொறிமுறையை தொடர்ந்தும் வலியுறுத்துகின்றனர்.

இதனை அரசாங்கம் தொடர்ந்தும் மறுக்கின்றது. தாங்கள் சர்வதேசம் செல்லத் தயாரில்லை எனவும், உள்நாட்டுப் பொறிமுறை ஊடாகத் தீர்வு வழங்குவதாகவும் கூறி வருகின்றது. இதுவே இந்த அரசாங்கத்தின் உண்மையான இனவாத முகம்" என அண்மையில் நாடாளுமன்றில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே- தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது போன்று முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் ஜனாதிபதி பேச வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கூறுகின்றது. வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்துப் பேசுவது தவறில்லைதான். ஆனால், எதுவும் பேசாமலிருந்து விட்டு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு என்று வருகின்ற போதே முஸ்லிம் அரசியல் வாதிகள் நித்திரை கொண்டெழுந்து பேசுவது போன்ற நடவடிக்கைகள் நீண்ட காலமாகவே நடைபெற்றுவருகின்றது.

நாடாளுமன்ற வரலாற்றில் ரணில் விக்ரமசிங்கவிற்காகக் கடுமையாக உழைத்தவர்கள் தாங்கள் என்று தெரிவித்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான பைசல் காசிம் தமிழ் மக்கள் சார்பில் இந்தியா ஆதரவு வழங்கும் நிலையில், முஸ்லிம் மக்கள் சார்பில் ஆதரவு வழங்க இந்தியா விரும்பாவிட்டால் நாம் சவூதி அரசாங்கத்தின் ஆதரவுடன் அதை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டிருப்பது ஒரு காழ்ப்புணர்வின் வெளிப்பாடு போன்றே பார்க்க முடிகின்றது.

தமிழ் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களான தங்களையும் அழைத்துப் பேசுங்கள் என்று ஜனாதிபதியிடம் முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை முன்வைத்தால் அது தவறில்லை.

ஆக, "இவ்வருட இறுதிக்குள் தீர்வு" என்று ஜனாதிபதி கூறுவது சாத்தியப்படப் போவதில்லை என்பதை மட்டும் உறுதியாகக் கூறாலாம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வொன்றை தான் இம்முறை நிச்சயம் வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்ற போதிலும், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை முற்றாகப் புறக்கணித்து விட்டு அவர் நினைக்கும் தீர்வினை திணிக்க முடியாது என்பதே உண்மை.

## ஆதனம்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

யாளர்களிற்காக தாம் வாழ்க்கை முழுவதும் தொழில்புரிய வேண்டியிருக்கும் என்ற கோபமான நிலையில் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

உலகளாவிய ரீதியில் ஒப்பீட்டளவில் சனத்தொகை அதிகரிப்பில் கனடா சிறப்பாகக் காணப்படுகின்றது. குறிப்பாக 20-30 வயதிற்குட்பட்டவர்கள் கனடாவிற்குக் குடிபெயர்வதால், கனடிய சனத்தொகை இந்த வருடம் 40 மில்லியனைத் தாண்டுகின்றது. வயது குறைந்தவர்கள் கனடாவிற்கு வருவது சிறப்பாக இருந்தாலும் அவர்களின் இருப்பிடத் திற்குத் தகுந்த முன்னேற்பாடு இல்லை என்பதனை அரசியல்வாதிகள் அறிந்திருந்த போதிலும் போதியளவு ஏற்பாடு செய்யவில்லை என்பது உண்மையே.

இன்றுபோல் எதிர்காலத்திலும் கனடிய வருகை ஒரு மில்லியன் புதியவர்கள் என்ற நிலை தொடருமாயின் ஆதன விலை, வாடகை அதிரிப்பு தவிர்க்க முடியாததாகவே இருக்கும். இதுபோன்ற நிலைமை முன்பு காணப்படவில்லை. எவ்வாறான அரசின் முடிவுகள், இந்நிலைமையை ஓரளவாவது மாற்றும் என்பதனை எதிர்பார்த்திருப்போம்.

எல்லா கஷ்டங்களும்
தீர்த்த பிறகுதான்
சிரிப்பேன் என நினைத்துக்
கொண்டிருந்தால்
சாகும்வரை சிரிக்கவே
முடியாது!




Sam Surendran
Mortgage Broker
LICENCE # M16002312
647-922-5704
MORTGAGE ALLIANCE
Office: 1585 Markham Road, Unit 110, Scarborough ON. M1B 2W1

MORTGAGE OFFICE
GOOD SERVICE . GOOD LENDERS
GOOD RATES
Apply for your mortgage loan today
*Hiring Mortgage Agents, Commission Income
www.OKmortgages.ca

நாமும் நமது இல்லமும் 631

# ஆதனம் வாங்குவதில் இன்றைய இளைஞர்களின் போக்கு



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

அண்மையில் ரொறொன்ரோ மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் 20 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவர்களின் புள்ளிவிபர கணக்கீடு எடுக்கப்பட்டது. இவர்களில் 52%ஆனவர்கள் ஆதனம் வாங்குவதில் ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமையால் மிகவும் கோபம் அடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவர்களில் 44%ஆனவர்களில் ஆதனம் வாங்குவதனை முற்றாக் கைவிட்டுள்ளதாகவும், 19%ஆனவர்கள் மட்டுமே தம்மால் எதிர்காலத்தில் ஆதனம் வாங்கக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளனர்.

30 வயதிற்கு மேற்பட்டவர்களின் தெரிவிப்பு வித்தியாசமாகக் காணப்படுகின்றது. அதாவது, அவர்கள் தமது வேலைபுரிந்த காலத்தில் ஆதன விலையின் அதிகரிப்பு அதிகமாகக் காணப்பட்டதாகவும், இந்நிலை தொடருமாயின், எதிர்காலத்தில் வாங்குவது மிகவும் கடினமாக காணப்படலாம் என தெரிவித்துள்ளார்கள்.



அண்மைக்காலமாக, ஒரு மில்லியனிற்கு அதிகமான மக்கள் கனடாவிற்குள் வருவதாலும், மக்களின் வாழ்வுக் காலம் அதிகரிப்பதாலும் இருப்பிடத்தின் பற்றாக் குறை அதிகரிப்பது இயல்பாகவே காணப்படுகின்றது. இதனால் ஒருவகையில் வாடகை அதிகரிப்பும் காணப்படுகின்றது. மறுபுறம் விலை அதிகரிப்பும் ஏற்படுகின்றது.

புள்ளிவிபரக் கணக்கில் பங்குபற்றியவர்களில் 60%இற்கு மேற்பட்டோர் தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து வாழ்வதாகவும் மிகுதியானோர் தகப்பன், தாய் அல்லது வேறு முறையில் வாழ்வதாகக் கூறியிருந்தனர்.

வாடகைக்கு இருப்பவர்களில் 37% ஆனவர்கள் வாடகைக்கு கொடுத்தபின், மிகுதி செலவிற்குப் பிறகு குறிப்பிட்ட பணத்தை சேமிக்கக் கூடியதாக இருப்பதாகத் தெரிவித்திருந்தனர். வாடகைக்கு இருப்பவர்களில் 36% ஆனவர்கள் தம்மால் சேமிக்க முடியாமல் இருப்பதாகத் தெரிய வருகின்றது. இவர்கள் எதிர்காலத்தில் ஆதனம் வாங்குவது கனவாகவே இருக்கும் என்கின்றனர்.

வாடகைக்கு இருப்பவர்களில் 85% ஆனவர்கள் தமது பிந்தைய காலத்தில் ஆதனம் வாங்கலாம் என நம்பிக்கை வைத்திருப்பதாகவும் அல்லது வேறு குறைந்த விலையில் ஆதனங்களை வாங்கக் கூடிய நகரங்களிற்கு இடம் பெயரக்கூடும் என்றும் கூறியிருந்தனர்.

முடிவாக, 17%ஆனவர்கள் வாங்க நம்பிக்கை இருப்பதாகவும், 29% ஆனவர்கள் கையாலாகாத நிலைமையில் (Frustrated) இருப்பதாகவும் 12% ஆனவர்கள் ஆதனம் வாங்கும் எண்ணத்தை முற்றாக கைவிட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மார்ச் 2023இல் கனடிய ரீதியில் மாதாந்த வாடகை ஓர் அறை கொண்ட மனைக்கு $1,752 ஆகவும், ரொறொன்ரோவில் $2,501 ஆகவும், வன்கூவரில் $2,640 ஆகவும் காணப்பட்டது.

வாடகைக்கு இருப்பதால், ஆதன உரிமை

(தொடர்ச்சி 05ஆம் பக்கம்...)



# சார்ள்ஸ்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்வது வரலாற்று ரீதியாக அரசின் இறையாண்மைக்கும், கடவுளுக்கும்



இடையிலான ஒரு முக்கியமான தருணமாகக் கருதப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தனியுரிமைக்கான தருணம். அதனால் இச்செய்கை நடைபெறும்போது பார்வை யாளர்கள் பார்க்க முடியாது. மன்னர் எண்ணெய் அபிஷேகம் முடிந்து வரும் வரையும் பாடகர் "Handle's Zadok the Priest" பாடினார். 1727ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு மன்னரின் முடிசூட்டு விழாவிலும் இந்நிகழ்வு நடைபெற்று வருகிறது.

இம்முடிசூட்டு விழாவில் தற்கால வாழ்வில் பிற இடங்களில் அரிதாகக் காணப்படும் மரபுகள் பேணப்பட்டதாக BBC ஊடகம் தெரிவித்துள்ளது. அது செங்கோல் (Sceptre), உருண்டை (Orb) மற்றும் முத்துக்கள் பதிக்கப்பட்ட வாள் (Sword of State) என்பன எடுத்துச் செல்லப் பட்டதை மேற்கோள் காட்டி இவ்வாறு தெரிவித்திருந்தது.

வெஸ்ற்மின்ஸ்ரர் அபேயில் முடிசூடிக் கொண்ட சார்ள்ஸ் III மன்னரும் இராணி கமீலாவும் 1.42 மைல் நீளமான பாதையில் குதிரை வண்டியில் வெஸ்ற்மின்ஸ்ரர் அபேயில் பவனியை ஆரம்பித்து பக்கிங்காம் அரண்மனை வரை (Buckingham Palace) தொடர்ந்தனர். இவர்கள் சென்ற குதிரை வண்டி தங்க இலைகளால் அலங்கரிக்கப்பட்டதுடன், பொன் நிறத்திலான பல வேலைப்பாடுகளை உடையது. இது Gold State Coach என அழைக்கப்படும். இது எட்டுக்குதிரைகள் பூட்டி இழுக்கப்படும். இந்தக் குதிரை வண்டி 1760ஆம் ஆண்டு செய்யப்பட்டது. 1761ஆம் ஆண்டில் ஜோர்ஜ் III மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு முதன்முதலில் பாவிக்கப் பட்டது. 4 தொன் நிறையும் 29 அடி நீளமும் 12 அடி உயரமுமான இக்குதிரை வண்டியில் பிரயாணம் செய்வது மிகவும் கடினமானது. இதில் பிரயாணம் செய்த அரச பரம்பரையினர், "இதில் பிரயாணம் செய்வது கடலில் தூக்கி எறியும் அலைகளுக்கு மத்தியில் கப்பலில் பிரயாணம் செய்வது போல் இருந்தது" எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஊர்வலத்தில் 4000 இராணுவ வீரர் பங்கு பற்றியிருந்தனர். இவ் ஊர்வலம் பக்கிங்காம் அரண்மனையை வந்தடைய 30 நிமிடங்கள் எடுத்தன. மன்னரும், இராணியும் பக்கிங்காம் அரண்மனைக்கு வந்து சேர்ந்த சிறிது நேரத்தின் பின்னர் அவர்கள் மற்ற அரச குடும்பத்தினருடன் பக்கிங்காம் அரண்மனையின் மேல் மாடியில் உள்ள முன்பாகத்திற்கு வந்து (balcony) அங்கு கூடியிருந்த கூட்டத்தினருக்கு கைகளை அசைத்து



வாழ்த்துத் தெரிவித்தனர்.

மன்னரும் இராணியும் அரச குடும்பத்தினருடன் இங்கு நிற்கும்போது ஐக்கிய இராச்சியத்தின் இராணுவம் கடற்படை மற்றும் விமானப்படைக்கு சொந்தமான 60இற்கும் மேற்பட்ட விமானங்கள் ஆறு நிமிடங்கள் வானவெளியில் கண்களைக் கவரும் விதத்தில் பறந்து மன்னருக்கும் இராணிக்கும் மரியாதை செலுத்தின. பழமைவாதக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முக்கியமாக Privy Councilஇன் தலைவருமான பெனி மோடான்ற் (Penny Mordaunt) 7 இறாத்தல் நிறையுள்ள வாளான Sword of Stateஐ வெஸ்ற்மின்ஸ்ரர் அபேயிற்கு ஊர்வலத்துடன் இரண்டு கைகளாலும் வாளை நிமிர்த்திப் பிடித்தபடி 51 நிமிடங்களாக நடந்து வந்தார். ஐக்கிய



Screens were held up by soldiers while the King was anointed with holy oil

இராச்சியத்தின் முடிசூட்டு விழாக்களில் இந்நிகழ்வை இம்முறைதான் முதன் முதலாக ஒரு பெண் செய்தார். 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மன்னர் சார்ள்ஸ் IIஇற்காகத் தயாரிக்கப்பட்ட இந்த வாளை அவர் எடுத்துச் சென்று வெஸ்ற்மின்ஸ்ரர் அபேயில் பேராயருக்கு வழங்கினார். பின்னர் அங்கிருந்து இரத்தினங்கள் பதிக்கப்பட்ட நிறை குறைந்த வாளான Sword of Offeringஐ பெற்றுக்கொண்டு திரும்பவும் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் இருந்து பக்கிங்காம் அரண்மனைக்கு மன்னருடனும், இராணியுடனும் ஊர்வலத்



The ampulla, shaped like an eagle, contains oil used in the coronation service.




தில் கொண்டு வந்தார்.

Sword of State எனப்படும் வாள் அரச அதிகாரத்தைக் குறிப்பது. இது நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்விலும் பாவிக்கப்படுகிறது. Sword of Offering எனப்படும் வாள் இங்கிலாந்தின் திருச்சபையைப் (Church of England) பாதுகாப்பதில் மன்னரின் அர்ப்பணிப்பைக் குறிப்பது. இவ்வாளில் "இங்கிலாந்து தேவாலயத்தின்



பாதுகாவலர்" என இலத்தீன் மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது.

74 வயதில் முடிசூடிக் கொள்ளும் மன்னர்



The Jewelled Sword of Offering & The Sword of State

சார்ள்ஸ் III, 1948ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 14ஆம் திகதி பக்கிங்காம் அரண்மனையில் பிறந்தவர். அப்போது அவரது தாய்வழிப் பேரனான ஜோர்ஜ் VI ஐக்கிய இராச்சியத்தின் மன்னராக இருந்தார். சார்ள்ஸ்இற்கு மூன்று வயதாக இருக்கும்போதே அவரது தாயார் எலிசபெத் II இராணியாக முடிசூடிக் கொண்டார். சார்ள்ஸ் தனது கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு (A-Level) பல்கலைக்கழகத்திற்குக் கலைத்துறையில் பயில அவர் Cambridge Trinty Collegeஇல் அனுமதி பெற்றார்.

இவர் University of Cambridgeஇலும் கல்வி பயின்று கலைத்துறையில் இளம் கலைமாணிப் பட்டம் பெற்றார் (Bachelor of Arts Degree). ஐக்கிய இராச்சியத்தின் அரச பரம்பரையில் பல்கலைக்கழகப்



பட்டம் பெற்ற முதலாவது ஆளாக சார்ள்ஸ் இருந்தார். சார்ள்ஸ் தனது இளம் கலைமாணிப் பட்டத்தை 1970 ஜூனிலும், முதுகலைமாணிப் பட்டதை 1975 ஒகஸ்ற் இலும் பெற்றார்.

சார்ள்ஸ் விமானப் படையிலும் மற்றும் கடற்படையிலும் பணியாற்றியுள்ளார். சார்ள்ஸ் 1981 ஜூலையில் டயனா ஸ்பென்ஸரைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு 1982இல் இளவரசர் வில்லியமும், 1984இல் இளவரசர் ஹரியும் பிறந்தனர். அதன் பின்னர் 1996 ஒகஸ்ற் இல் இருவரும் விவகாரத்துச் செய்து கொண்டனர். பின்னர் 2005 பெப்பிரவரியில் சார்ள்ஸ், கமீலா பார்க்கர் நிச்சயதார்த்தம் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டது.

இராணி எலிசபெத் IIஇன் மரணத்தின் பின்னர் சார்ள்ஸ் III, 2022 செப்ரெம்பர் 8ஆம் திகதி ஐக்கிய இராச்சியத்தின் மன்னரானார். 73 வயதில் அரச பதவி ஏற்று, அதிக வயதில் அரச பதவி ஏற்றவராக சார்ள்ஸ் III மன்னர் சரித்திரத்தில் இடம் பிடிக்கிறார். இவரிற்கு முன்னர் அதிகூடிய வயதில் அரச பதவி ஏற்றவர் வில்லியம் IV மன்னர் ஆவார். அவர் 1830இல் அரச பதவி ஏற்கும்போது அவருக்கு வயது 64 ஆகும்.



# நானிலம் போற்றும் நட்பு - 21



- அகணி -
authorakani@gmail.com

"பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு." (அதிகாரம் பழமை, குறள் 801) என்ற குறளிற்கு "பழைமை என்று சொல்லப்படுவது எது என்று வினாவினால் அது பழகியவர் உரிமை பற்றிச் செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாமல் ஏற்கும் நட்பாகும்." என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"நண்பர் உரிமையால் செய்வனவற்றை இழிவுபடுத்தாமல் தொடரும் நட்பையே பழமை என்பர்." என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"பழைய நட்பினர் உரிமையுடன் செய்தவற்றை அப்படியே ஏற்றுக் கொள்வதே நட்பாகும்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்." என்ற அறிவுரையை இந்தக் குறள் வழங்குகிறது.

நண்பர்கள் உரிமையோடு செய்வனவற்றை ஏற்று, மதித்து வாழவேண்டும் என்ற அறிவுரை மேற்குறிப்பிட்ட குறள் வாயிலாக நாமறிந்த செய்தியாகும்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய 'நான்மணிக்கடிகை' என்பது நான்கு இரத்தினத் துண்டங்கள் என்னும் பொருளைத் தரும். ஒவ்வொரு பாடலிலும் நான்கு சிறந்த கருத்துக்களைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் விளம்பி நாகனார் என்பவர். விளம்பி என்பது ஊரைக் குறிப்பதாகக் கொள்ளலாம். உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையினைத் துணையாகக் கொண்டு ஆராய்வோம். இந்த நூலில் இருந்தும் சில பாடல்கள் கூறும் நட்பு பற்றிய கருத்துக்களைக் கடந்த இதழில் ஆராய்ந்தோம். மேலும் சில நான்மணிக்கடிகை பாடல்களில் உள்ள நட்பு பற்றிய கருத்துகளை ஆராய்வோம்.

நான்மணிக்கடிகை _ பாடல் 23
"மலைப்பினும், வாரணம் தாங்கும் குழவி,
அலைப்பினும், "அன்னே!" என்று ஓடும் சிலைப்பினும்,
நட்டார் நடுங்கும் வினை செய்யார் ஒட்டார்
உடன் உறையும் காலமும் இல்."

அலைத்தல் - அடித்து வருத்தல், குழவி - குழந்தை
பாகன் தன்னைப் பொருதாலும் யானை அவனைச் சுமந்து செல்லும். தாய் தன்னை அடித்தாலும் குழந்தை அன்னையை நாடிச் செல்லும். தவறு கண்டு நண்பர் கடிந்துரைத்தாலும் நண்பர் நடுங்கும்படியான செயலைச் செய்யமாட்டார். ஆனால் பகைவரோ எப்போதும் ஒன்று பொருந்தி வாழ்வதில்லை.

நான்மணிக்கடிகை _ பாடல் 24
"நகை நலம் நட்டார்கண் நந்தும் சிறந்த
அவை நலம் அன்பின் விளங்கும் விசை மாண்ட
தேர் நலம் பாகனால் பாடு எய்தும் ஊர் நலம்
உள்ளானால் உள்ளப்படும்."

நட்டார் - பகைவர், உள்ளப்படும் - மதிக்கப்படும்
முகமலர்ச்சியின் நன்மை நண்பர்கள்பாற் சிறந்து தோன்றும். அவற்றின் நன்மை அன்பினால் தோன்றும். விரைந்த செலவையுடைய தேரின் நன்மை அதைச் செலுத்தும் பாகனாற் பெருமை பெறும். ஊரின் நன்மை அரசனது நற்செயல்களால் மதிக்கப்படும்.

நான்மணிக்கடிகை _ பாடல் 25
"அஞ்சாமை அஞ்சுக! ஒன்றின், தனக்கு ஒத்த
எஞ்சாமை, எஞ்சும் அளவு எல்லாம்! நெஞ்சு அறியக்
கோடாமை, கோடி பொருள் பெறினும்! நாடாமை,
நட்டார்கண் விட்ட வினை"

கோடி - கொள்ளுவாம்
அஞ்சத் தகுந்த செயலைச் செய்ய அச்சப்பட வேண்டும். இயன்ற அளவு பிறருக்கு உதவி செய்ய வேண்டும். கோடி பொருள் கொடுத்தாலும் மனமறிய நடுவு நிலைமையில் இருந்து மாறுபடக் கூடாது. நண்பர்களின் பொறுப்பில் விட்ட காரியங்களை ஆராய்ந்து பார்க்கக் கூடாது.




நான்மணிக்கடிகை _ பாடல் 36
"நகை இனிது, நட்டார் நடுவண் பொருளின்
தொகை இனிது, தொட்டு வழங்கின் தகை உடைய
பெண் இனிது, பேணி வழிபடின் பண் இனிது"
பாடல் உணர்வாரகத்து, நட்டார் - நண்பர்

நண்பரிடத்தில் முகமலர்ச்சி தளும்பும். வறியவர்களுக்கு வழங்குவதால் செல்வக்குவியல் இன்பம் தரும். கணவனின் கருத்திற்கு ஏற்ப செயல்படுவதால் பெண்கள் இனியராவர். பாடலுணர்வாரிடத்துப் பண் இனிமை தரும்.

நான்மணிக்கடிகை _ பாடல் 43
"பொறி கெடும், நாண் அற்ற போழ்தே நெறிப்பட்ட
ஐவரால் தானே வினை கெடும் பொய்யா
நலம் கெடும், நீர் அற்ற பைங் கூழ் நலம் மாறின்,
நண்பினார் நண்பு கெடும்."

பொறி - திருமகள், பைங்கூழ் - பசுமையான பயிர்
ஒருவனுக்கு நாணம் நீங்கினால் செல்வம் கெடும். ஐம்பொறிகள் தன் வழிப்பட்டால் தீவினை கெடும். நீரற்றால் பசும்பயிர்களின் விளைவு கெடும். நண்பனின் நல்லியல்பு மாறினால் நட்புக் கெடும்.

நான்மணிக்கடிகை _ பாடல் 48
"சிறந்தார்க்கு அரிய, செறுதல் எஞ் ஞான்றும்
பிறந்தார்க்கு அரிய, துணை துறந்து வாழ்தல்
வரைந்தார்க்கு அரிய வகுத்து ஊண் இரத்தார்க்கு ஒன்று
"இல்" என்றல் யார்க்கும் அரிது."

செறுதல் - சினத்தல்
சிறந்த நண்பர் தம்முள் ஒருவரையொருவர் சினந்து கொள்ளமாட்டார்கள். உயர் குடிப்பிறப்பினர் தன் இனத்தாரை நீங்கி வாழமாட்டார்கள். தமக்கே செலவு செய்து தன்னலம் கருதி வாழ்வோர் பிறர்க்குப் பகுத்துண்டு வாழும் பண்பறிய மாட்டார்கள். அருளுடையவர்கள் இரந்தவர்களுக்கு இல்லை என்று கூற மாட்டார்கள்.

நான்மணிக்கடிகை _ பாடல் 61
"பழி இன்மை மக்களால் காண்க! ஒருவன்
கெழி இன்மை கேட்டால் அறிக! பொருளின்
நிகழ்ச்சியான், ஆக்கம் அறிக! புகழ்ச்சியான்,
போற்றாதார் போற்றப்படும்."

கெழி - நட்புரிமை
ஒருவன் தன் நன்மக்கட் பேற்றினால் பழிப்பிற்கு ஆளாவதில்லை. நட்பியல்பு உடையவனுக்குப் பொருள் கேடு ஏற்படாது. பொருள் வரவு அதிகரிக்க அவனுக்கு உயர்வு உண்டாகும். தான் பிறரால் போற்றப்படுவதால் அவன் பகைவராலும் வணங்கப்படும் தன்மையைப் பெறுவான்.

நான்மணிக்கடிகை _ பாடல் 86
"பெருக்குக, நட்டாரை நன்றின் பால் உய்த்து!
தருக்குக, ஒட்டாரைக் காலம் அறிந்தே!
அருக்குக, யார்மாட்டும் உண்டி! சுருக்குக,
செல்லா இடத்துச் சினம்."

அருக்குதல் - சுருங்குதல்
நண்பனை நன்மையின் பாற் செலுத்தி நல்வாழ்வில் உயர்த்துக் பகைவரைக் காலமறிந்து தாக்கி வெற்றி கொள்க. யாராயினும் அடுத்தடுத்து உண்ணுவதைத் தடுத்துக் கொள்ள வேண்டும். செல்லத் தகாத இடத்தில் சினத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும்.

நான்மணிக்கடிகை _ பாடல் 98
"எண் ஒக்கும், சான்றோர் மரீஇயாரின் தீராமை
புண் ஒக்கும், போற்றார் உடனுறைவு பண்ணிய
யாழ் ஒக்கும், நாட்டார் கழறும் சொல் பாழ் ஒக்கும்,
பண்பு உடையாள் இல்லா மனை".

கழறல் - இடித்துரைத்தல்
சான்றோர்களைப் பிரியாமை அறிவுடைமையாகும். தம்மைப் போற்றி இணங்காதவரோடு வாழ்தல் புண்ணுக்கு நிகராகும். நண்பர்கள் இடித்துரைக்கும் சொல் வலியதாயினும் யாழோசைப்போல (தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)



# ஆதித்த கரிகாலனைக் கொலை செய்தது பிராமணர்கள் மட்டுமல்ல!

## நேர்காணல்: தொல்லியல் ஆய்வாளர் சொ. சாந்தலிங்கம் நேர்கண்டவர்: தினகரன் ஜெய்

தமிழ்நாட்டைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர்களில் முக்கியமானவர் முனைவர் சொ. சாந்தலிங்கம். 'தொண்டை மண்டலம்: நாடுகளும் ஊர்களும்' எனும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற சாந்தலிங்கம், தமிழ்நாடு தொல்லியல் துறையில் பணியில் சேர்ந்து, இறுதியில் உதவி இயக்குநராகப் பணி ஓய்வு பெற்றார். தற்போது பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையத்தின் செயலாளராக உள்ளார். மேலும் 'தொல்லியல் கழகம்' எனும் அமைப்பின் துணைத் தலைவராகவும் உள்ளார். இவரது 'வரலாற்றில் தகடூர்', 'சித்திரமேழி', 'மதுரையில் சமணம்' போன்ற நூல்கள் மிக முக்கியமானவையாகும். பொ. இராசேந்திரனுடன் இணைந்து 'கோவில் கலை', 'மாமதுரை' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். மேலும் திருக்கோவில் உலா என்ற நூல் உட்பட மொத்தம் 20க்கும் மேற்பட்ட நூல்களையும் Studies in archaeology, Jainism in Pandya Nadu என்ற ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார்.

மதுரையில் உள்ள சாந்தலிங்கம் இல்லத்தில் இந்த நேர்காணல் பதிவு செய்யப்பட்டது.

**எழுத்தாளர் கல்கியின் 'பொன்னியின் செல்வன்' நாவல் மணிரத்னம் இயக்கத்தில் திரைப்படமாக வெளிவந்ததை ஒட்டி சோழர்கள் மீண்டும் பேசுபொருளாக ஆகியிருக்கிறார்கள். இதனையொட்டி, அக் காலத்தில் பார்ப்பனீயத்தை சோழர்கள் பாதுகாத்தார்கள் என்ற வாதம் சிலரால் முன்வைக்கப்படுகிறது. இது ஏற்புடையதா?**

தமிழ்நாட்டில் சோழர் கால ஆட்சி என்பது கி.மு. 846இல்தான் தொடங்குகிறது. சங்க காலத்தில் சோழர்கள் இருந்தார்கள். அதற்குப் பிறகு 600 ஆண்டு காலம் என்ன ஆனார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. பின்னர், கி.பி. 846இல் சோழர் ஆட்சி தொடங்கி 1279இல் முடிவடைகிறது. இக்காலத்தில் சோழர்கள் முழுக்க முழுக்க பிராமணர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்ற வாதம் ஏற்புடையதல்ல.

தமிழ்நாட்டில் சோழர்களுக்கு முன்னோடியாகக் கோவில் பண்பாட்டை உருவாக்கியவர்கள் பல்லவர்கள். அவர்கள் ஆந்திர பகுதியில் இருந்து வந்து தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவ சாம்ராஜ்யத்தை உருவாக்கினர். பல்லவர்கள்தான் கற்களால் கோவில் கட்டி வழிபடக்கூடிய ஒரு மரபை தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அதற்கு முன்பு மண்ணாலும் மரத்தாலும் செங்கற்களாலும் கட்டப்பட்ட கோவில் வழிபாட்டு முறைகள் இருந்தன. அவையெல்லாம் கால வெள்ளத்தில் அடித்துச் சென்றுவிட்ட காரணத்தாலே கல்லால் கோவில் கட்டி நிரந்தரமான கோவில்களை அமைத்து அதில் பூசைகளை செய்வதற் காக ஆந்திர பகுதியிலிருந்து பிராமணர் களைக் கொண்டு வந்து குடியமர்த்தினர். எனவே, கோவில் ஒவ்வொரு கிராமத்திற் கும் ஒரு முக்கியமான அங்கமாக, இன்னும் விளக்கமாக சொல்வதென்றால் அதிகார மையமாக செயல்பட்டது. கோவில் நிர்வாகத்தின் அமைப்பைக் கொண்டே ஊர்களை நிர்வாகம் செய்வது, ஊரிலிருந்து வரி வசூல் செய்வது போன்ற அனைத்துப் பணிகளையும் அரசர்கள் செய்தனர்.

எனவே, தமிழ்நாட்டில் கோவில் வழிபாட்டு முறையின் தொடக்கம் என்பது பல்லவர் காலத்திலே தொடங்கிவிட்டது. தொடர்ந்து பல்லவர், சோழர், பாண்டியர் பகுதிவரை நீடித்தது. ஆனால், சோழர்கள் காலத்தில் தான் நிறைய கோவில்கள் கட்டப்பட்டன. குறிப்பாக சோழ நாட்டிலே நீர் வளமும்



நிலவளமும் மிகுந்த ஒரு நிலப்பரப்பாக இருந்த காரணத்தால் ஊர் தோறும் கோவில்கள், ஊருக்கு இரண்டு மூன்று கோவில்கள் என்று சோழர்கள் கட்டினர். சைவ, வைணவ கோவில்கள் எந்த வேறுபாடும் இல்லாமல் கட்டப்பட்டன. அவ்வாறு கட்டுகின்றபோது அதிலே பணி செய்வதற்கு நிறைய பிராமணர்கள் தேவைப்பட்டனர். அவர்களைக் கொண்டுவந்து குடியமர்த்தி அவர்களுடைய வாழ்வாதாரங்களுக்காக நிலங்களை வழங்கும்போது பிரம்மதேயங்கள், சதுர்வேதி மங்கலங்கள் என்று வழங்கினார்கள். எனவே, அந்தக் கோவில் பூசைப் பணிகள், கோவில் நிர்வாகப் பணிகள் என்று பிராமணர்களுடைய செல்வாக்கு அல்லது ஆதிக்கம் அதிகமாக இருந்தது. ஆனால், அரசு நிர்வாகத்தில் பல்வேறு தரப்பினரும் பதவிகளில் இருந்தனர். படைத் தலைமையிலேயோ அல்லது வேறு சில நிர்வாக மட்டத்திலேயோ பல்வேறு தரப்பை சேர்ந்தவர்கள் அதிகாரிகளாக இருந்தனர். எனவே, முழுக்க பார்ப்பனிய ஆட்சியாக சோழர்கள் ஆட்சி இருந்தது என்று சொல்வதற்கில்லை.

**வைதீகம், சோழர்களின் ஆட்சியில் தான் புத்துயிர் பெற்றது என்றும் சமஸ்கிருதம் வளர்த்தெடுக்கப்பட்டது என்றும் குற்றம் சாட்டப்படுகிறதே...**

